| தமிழ் | புள்ளித்திட்டம் | தரம் :- 12 (2016) |
|---|---|---|

1) i) அ) நிறைந்த சுற்றத்தவரையும் கொடிய பசியையும் உடைய இரவலனே வெற்றி பொருந்திய வேற்படையை உடைய தலைவனைக் காண்பதற்கு முன்னர் உன்னை விட மிக வறியவராக இருந்தோம் அவ்வள்ளலைக் கண்ட பிறகு இவ்வாறான செல்வநிலையை உடையவராகி விட்டோம். எப்பொழுதும் உடுத்துதலோ போர்த்துதலோ செய்யாது என்பதை அறிந்திருந்தும் தனது போர்வையை மயிலுக்கு வழங்கியவன் எமது அரசனான மதங்கொண்ட யானைப்படைகளையும், செருக்குடைய குதிரைப்படைகளையும் உடைய பேகனாவான். எவ்வளவு ஆயினும் கொடுப்பதே நல்லது என்று மறுமைப் பயனை எதிர்பார்த்தோ என்றால் அது இல்லை. பிறரது வறுமையை நோக்கிக் கொடுப்பதே அவனது கொடைத் திறனாகும்.

ஆ) ஆற்றுப்படுத்தலை உத்தியாகப் பயன்படுத்திக் கூறப்பட்டுள்ளது

பேகனைக் காணமுதல் இருந்த கோலத்தையும் கண்ட பிறகு இருந்த கோலத்தையும் கூறி நம்பிக்கை ஏற்படுத்தல்.

மயிலிற்கு இரங்கி போர்வை வழங்கிய செய்தியைக் கூறல்

பயன் கருதாக் கொடை எனவும் வறுமையை நீக்குவதை நோக்காகக் கொண்டது எனவும் கூறல்

இ) பேகனது வீரமும் ஆற்றலும் அவன் மதங்கொண்ட யானைப் படைகளையும் செருக்குடைய குதிரைப்படைகளையும் உடையவன் எனக் கூறுவதன் ஊடாக உணர்த்தப்பட்டுள்ளது.

(4+4+2= 10 புள்ளிகள்)

ii) அ) தசரதன் அரச கருமங்கள் அனைத்தையும் முடித்து நள்ளிரவு கழிந்த வேளையில் கைகேயியின் மாளிகையை அடைந்த போது அங்கு அவள் அழகுக் கோலத்தைச் சிதைத்து தரையில் வீழ்ந்து கிடக்கும் காட்சியைக் காணும் சந்தர்ப்பம்

ஆ) தசரதனின் அன்பு

கைகேயியின் கோலத்தைக் கண்டு வருந்துதல்

மனம் சோர்வடைதல்

அணைத்துத் தூக்க முயலுதல்

கைகேயியின் வெறுப்பு

தசரதனின் அணைப்பை ஏற்காமல் கையைத் தட்டிவிடல்

மறுபடியும் தரையில் விழுதல்

அவனுடன் உரையாடவோ மரியாதை செய்யவோ முயலாமல் பெருமூச்செறிதல்

இ)
- தசரதன் கைகேயியை அணைத்துத் தூக்க முயலும் செயலை விளக்க உவமை அணி பயன்படுத்தப்பட்டுள்ளது

  உவமானம் - யானை மானைத் தூக்குதல்

  உவமேயம் - தசரதன் கைகேயியைத் தூக்குதல் யானை மானைத் தூக்குதல் இயல்பில்லை என்பதால் தசரதனின் அணைப்பை கைகேயி ஏற்கமாட்டாள் என்பதை உணர்த்துதல்

- கைகேயி தரையில் வீழும் செயலை விளக்க.

  உவமானம் - மின்னல் விழுதல்

  உவமேயம் - கைகேயி தரையில் விழுதல்

  கைகேயியின் மென்மையும் ஒளியும் காரணமாக மின்னலுடன் ஒப்பிடப்பட்டுள்ளார்

(2+4+4 = 10 புள்ளிகள்)

**2)** கட்டுரை

| | |
|---|---|
| பொருள் (விடயம்) | 10 |
| அளவும் அமையும் | 06 |
| மொழிநடை | 04 |
| | 20 புள்ளிகள் |

**3)** அ)

1) – 3
2) – 1
3) – 1
4) – 3
5) – 1
6) – 2
7) – 1
8) – 4
9) – 1
10) – 4

(10 புள்ளிகள்)

ஆ)

1) மெய்யெழுத்துக்கள் தமக்குரிய ½ மாத்திரையில் இருந்தும் நீண்டொலித்தல் அளபெடுத்தலுக்கு அடையாளமாக அதே எழுத்து இடப்படும் மொழியின் இடையிலும் கடையிலும் அளபெடுக்கும் ங, ஞ, ண, ந, ம, ன, ல, வ, ழ ஆகிய பத்து மெய்யெழுத்துக்களும் ஆய்த வெழுத்தும் அளபெடுக்கும்
உதாரணம் :- இல<u>ங்ங்</u>கு (மொழிஇடை)
திர<u>ள்ள்</u> (மொழிகடை)

2) சொல்லின் இடையில் வெவ்வேறு மெய்கள் மயங்கி வருதல் வேற்று நிலை மெய்ம்மயக்கம்
உதாரணம் - மாண்பு (ண்ப்)
ர், ழ் ஆகிய இரு மெய்யெழுத்துக்களும் வேற்றுநிலை மெய்ம்மயக்கமாக மட்டுமே வரும்

3) ஒரு சொல்லின் பகுதி பகாப்பதமாக இருந்தால் தனிப்பகுதி எனப்படும்
உதாரணம் - வந்தான் - வா
அழுதான் - அழு
ஒரு சொல்லின் பகுதி பகுபதமாக இருந்தால் அது கூட்டுப்பகுதி எனப்படும்
உதாரணம்:- எழுதிமுடித்தான் - எழுதிமுடி
சொல்லி வைத்தான்- சொல்லிமுடி

4) பெயர் அல்லது வினைச் செயலுடன் ஆக்கப் பெயர் விகுதி சேர்ந்து உருவாக்கப்படும் பெயர் ஆக்கப் பெயராகும்
வேலை + காரன் = வேலைக்காரன்
சிரி + ப்பு = சிரிப்பு

5) எப்பொருள் எச் சொல்லால் அமைந்ததோ அப்பொருளை அச் சொல்லால் கூறுதல் இயல்பு வழக்கு மூன்று வகைப்படும்
1. இலக்கணமுடையது
உதாரணம் - மண், மரம், வானம்
2. இலக்கணப் போலி
உதாரணம் - முன்றிப், புறநகர்
3. மரூஉ
உதாரணம் - அருமந்த, ஆர்

(5X2= 10 புள்ளிகள்)

## பகுதி II – அ

**4)** அ) ''வினைத்திடபம் என்பது….''

ஆ) ''ஊறுஏராய்……..''

''கடை கொட்கச் செய்தக்கது….''

இ) ''சொல்லுதல் யார்க்கும் எளிய…'' (வினைத்திட்ப அருமை)

''வீறெய்தி மாண்டார்….'' (வினைத்திட்ப சிறப்பு)

ஈ) ''எண்ணிய எண்ணியாங்கு….'' (வினைத்திட்ப பயன்)

''உருவு கண்டு எள்ளாமை…'' (வினைத் திட்பம் உடையவரை அறியுமாறு)

''கலங்காது கண்ட …''

''துன்பம் உற வரினும்…'' (வினை செய்யும் முறை)

உ) ''எனைத் திட்பம் எய்தியக் கண்ணும்…''

(2+4++4+8+2 = 20 புள்ளிகள்)

**5)** அ) அரும்பு நகை மொட்டு நகை போது நகை பூ நகை என பல நகைப்புகள் சேர்ந்து கொத்தாக உள்ளது போல தலைவனின் நகைப்பு பல அர்த்தங்களைக் கொண்டிருப்பதனாலும் சம்பவத்தின் மையமாக அமைவதாலும் தலைப்புடன் பொருந்துகின்றது.

ஆ) தலைவனை முன்னர் அறிந்திருந்தும் அறியாதவள் போல் நடத்தல்

தாயிடம் உண்மையை மறைத்துக் கூறல்

தலைவனின் கடைக்கண்பார்வையையும் நகைப்பையும் விரும்பி இரசித்து தோழிக்குக் கூறல்

நடந்த நிகழ்வினை மீளவும் நினைத்தல்

இ) பாத்திரங்களுக்கு இடையே உரையாடல் பண்பு

நாடகப்பாங்கு

வினா - விடை

நகைச்சுவையும் இரசனையும் மிக்கதாக அமைதல்

சிறிய வசனநடை தேவையான இடத்தில் நீண்ட வசனங்களைக் கொண்டிருத்தல்

**4)** அ) தாயுடன் சேர்ந்து உறங்கலாம் எனல்

பிறந்த நாளையும் நட்சத்திரத்தையும் நினைவூட்டல்

பலகாரங்கள் செய்து வைத்துள்ளமையை ஆசைகாட்டுதல்

நீராட்டத்துக்கும் அலங்காரத்திற்கும் பொருட்களை எடுத்துவைத்தல்

ஆய்ச்சியர் கேலி பேசுவர் எனல்

கண்ணன் செய்த பிழைகளையும் குறும்புகளையும் சொல்லமாட்டேன் எனல்

நப்பின்னை கண்டால் நகைப்பாள் எனல்

ஆ) சூரியன் (கிரணன்), காற்று, நதிகள், மலர்கள், வானம், மேகம், பனித்துளி, நிலவு ஏனையவற்றின் நிகழ்வுகளை விளக்குதல்

இ) விளைச்சலுக்குப் பயன்படாத நிலத்தை வளப்படுத்தும் செயற்பாடுகளை விபரித்தல்

நிலத்தடியில் உள்ள ஆழநீரை எடுத்து உயிரைக் கொடுத்து உழைத்தல்

மழைவெள்ளம் அழித்தாலும் மீண்டும் முயலுதல்

ஈ) வேலைக்கு சென்ற இடத்தில் வள்ளி சுதந்திரமும் உரிமையுமற்று வாழும் சந்தர்ப்பங்களை எடுத்துக்காட்டி வீட்டுச் சூழலுடன் ஒப்பிட்டு விளக்குதல் வேண்டும்

உ) தலைவன் வராதிருப்பதை எண்ணி வருந்துதல்

வேம்பின் பூ சூடப்படாமல் உதிர்வதை எண்ணி வருந்துதல்

அயலவர்களின் வசைமொழிகளால் தனது மனம் வருந்துதலை உவமைகள் மூலம் வெளிப்படுத்தல்

(7 + 7 + 6 = 20 புள்ளிகள்)

## பகுதி II - M

**5)** அ) பக்தியை வெளிப்படுத்தல், அகவுருத்தோற்றப்பொலிவு, திருவருட் செயல்களைப் பாடுதல், உறவுமுறைகளைப் பாடுதல், தெய்வீகக் காதலை வெளிப்படுத்தல், தூது அனுப்பும் பண்பு, கோவில் சார் இயற்கை வர்ணனை, பதிக இலக்கிய வடிவம், நாட்டுப்புற இலக்கிய வடிவங்களைப் பயன்படுத்துதல், விருத்தப்பாவின் செல்வாக்கு

ஆ) மானிடக்காதல், தெய்வீகக் காதலாக மாறுதல்
கைக்கிளை, பெருந்திணைச் செல்வாக்கு
தூது அனுப்பும் பண்பு
பதிகம், கோவை வடிவத்தோற்றத்திற்கு உதவுதல்
கூற்றுநிலைப் பாடல்
சங்ககாலத்தில் கருப்பொருளாக அமைந்த இயற்கை, கோவில் சார் இயற்கை வர்ணனை பாட உதவுதல்

இ) திருவாசகம், திருக்கோவையார் எனும் இரு இலக்கியங்களைப் பாடியுள்ளார்
உணர்ச்சிப் பெருக்குடையவை, இறை அனுபவ வேட்கையை வெளிப்படுத்துபவை
திருக்கோவையாரில் நாயகன் நாயகி பாவனை கையாண்டுள்ளமை
நாட்டார் இலக்கிய வடிவங்களைப் பயன்படுத்தல்
சதகம், விண்ணப்பம் போன்ற புதிய வடிவங்களை அறிமுகப்படுத்தியமை

(7 + 7 + 6 = 20 புள்ளிகள்)

**6)** அ) ஈழத்துப் பூதந்தேவனார் பாடல்கள், பட்டினப்பாலையில் வரும் ஈழம் பற்றிய குறிப்புகள், திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் முதலான தலங்கள் மீதான பாடல்கள், கல்வெட்டுச் சான்றுகள், அகழ்வாராய்ச்சிகள்

ஆ) ஏற்றுக்கொள்ளக் காரணங்கள்
பட்டினப்பாலையில் ஈழம் இலங்கையைக் குறித்தல்
நீண்ட கால கலாசார பண்பாட்டுத்தொடர்பு இலங்கைக்கும் தமிழகத்திற்கும் இடையே நிலவுதல்
புவியியல் ரீதியாக தமிழகம் அண்மையில் உள்ளதால் புலவர் அங்கு சென்று வாழ்ந்திருக்கலாம்
நிலைபேறான ஆட்சி இன்மையால் ஈழத்தில் புலவரை ஆதரிப்பவர் இன்றி அவர் தமிழ்வளர்த்த மதுரைக்கு சென்றிருக்கலாம்.

மறுக்கக் காரணம் :-
போதிய அகச்சான்றோ, புறச்சான்றோ பாடலில் இல்லை
ஈழம் என தமிழகத்தில் உள்ள ஒரு பிரதேசத்தையும் குறிக்கும் வழக்கம் (ஈழவன்கேசரி) இருந்துள்ளமை

இ) அறிவியற் சார்புடைய இலக்கியங்களாவன
i) சோதிடம் சார்ந்தவை - சரசோதிமாலை, செகராசசேகரமாலை
ii) வைத்தியம் சார்ந்தவை - பரராசசேகரம், செகராசசேகரம் இந்நான்கு நூல்களையும் சுருக்கமாக விளக்குதல் வேண்டும்.

(6 + 6 +8 = 20 Gs;sp)